# இருட்தேர்



கெகிறாவ ஸஹானா

ஜீவநதி வெளியீடு

# இருட்தேர்

கெகிறாவ ஸஹானா

**ஜீவநதி வெளியீடு**
**கலை அகம்**
**அல்வாய்**

**2011**

**இருட்தேர்**

ⓒ கெகிறாவ ஸஹானா

முதற்பதிப்பு
2011 டிசம்பர்

விலை
ரூபா 200/=

நூலாக்கக் குறிப்புகள்
பக்கங்கள் iv + 87 12 புள்ளி எழுத்துகள்

அட்டைப்பட வடிமைப்பு
க.பரணீதரன்

வெளியீடு
'ஜீவநதி', கலைஅகம், அல்வாய்

அச்சுப்பதிப்பு
மதி கலர்ஸ், நல்லூர்

ISBN: 978-955-51679-3-2

**ஜீவநதி வெளியீடு:15**



## சமர்ப்பணம்

அன்பு என்ற சொல்லுக்கு
இலக்கணமாகத் திகழ்கின்ற
அன்பு ஜவஹர்ஷா அவர்களுக்கு

## நூலாசிரியரின் பிற நூல்கள்

1.ஒரு தேவதைக் கனவு

(சிறுகதைத் தொகுதி)

2.இன்றைய வண்ணத்துப் பூச்சிகள்

(கவிதைத் தொகுதி)

3.ஒரு கூடும் இரு முட்டைகளும்

(குறுநாவல்)

4.சூழ ஓடும் நதி - ஆய்வுநூல்

(மட்டக்களப்பு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது வென்றது)

# பதிப்புரை

ஜீவநதி சஞ்சிகைகள் 15ஆவது வெளியீடாக கெக்கிறாவ ஸஹானாவின் "இருட்தேர்" கவிதைத் தொகுதியை ஜீவநதி வெளியீடாக வெளியிட்டு வைப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். ஆழ்ந்த இலக்கிய அனுபவமுடையவராகவும், இலக்கியப் பற்றுடையவராகவும், சிறந்த சிறுகதை ஆசிரியராகவும், கவிஞராகவும், கட்டுரையாளராகவும், குறுநாவல் ஆசிரியராகவும் திகழ்ந்து வருபவர் இந்நூலாசிரியை.

ஈழத்துப் பெண் படைப்பாளிகளில் தவிர்க்கப்பட முடியாத முக்கியமான பெண் படைப்பாளியாக கெக்கிறாவ ஸஹானா விளங்குகின்றார். இதுவரை நான்கு நூல்களை வெளியிட்டுள்ளார். இது இவரது இரண்டாவது கவிதைத் தொகுதியாகும். இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் பல்வேறு பாடுபொருளில் சுவைபட கவிநயம் சொட்ட எழுதப்பட்டுள்ளன. ஜீவநதியின் ஏனைய வெளியீடுகள் வாசகர்களிடையே பெற்ற வரவேற்புப் போல இந்நூலும் வரவேற்புப் பெறும் என எண்ணுகின்றேன்.

நூலாசிரியை இன்னும் பல்லாண்டு காலம் பல நூல்களை வெளியிட வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

க.பரணீதரன்
பிரதம ஆசிரியர் ஜீவநதி
கலைஅகம், அல்வாய்.
2011.12.15

# என்னுரை

கவிதை பற்றிய பிரமிப்பு இன்னும் என்னுள் நீங்காத வண்ணமே உள்ளது. கவிதை என்பதற்கு சுயம் என்று பொருள் கொள்ளலாமோ என்று பல வேளைகளில் எனக்குத் தோன்றுகின்றது. இதிலுள்ள சில கவிதைகள் ஏன், எதற்காக, எந்தச் சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டன என்ற ஞாபகங்களைக் கடந்துவிட்ட பின்னாலும் அவை இன்னும் கவிதைகளாகவே இருக்கின்றன என்ற காரணத் தினால் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. சில கவிதைகளில் என்னையறி யாமலேயே சில சொற்கள் எங்கிருந்தோ வந்து விழுந்துவிடுகின்றன. கவிதையின் பொருட் பொருத்தம் கருதி அச்சொற்களை நான் நீக்க முனையும்போது அவை கவிதையின் தற்கிழமைகளாகி விடுகின்றன.

இதிலுள்ள சில கவிதைகள் பிரசுர களம் கண்டுள்ளன. அவற்றைப் பிரசுரித்த இதழாசிரியர்களுக்கு எனது நன்றிகள் உரியன. அத்துடன் கூப்பிட்ட குரலுக்கு இசைந்து எமக்கு உதவிகள் செய்கின்ற அன்புத் தம்பி "விடிவெள்ளி" நஜிமுதீனுக்கும், எப்போதும் என்னை வாய் நிறைய "அம்மா" என்று அழைக்கின்ற, இளைய தலைமுறையின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கின்ற "ஜீவநதி" பரணீதரனுக்கும் எனது விஷேட நன்றிகள் உரியன.

அன்புடன்,
கெகிறாவ ஸஹானா.
2011.12.14

# பொருளடக்கம்


1. கடியானும், கட்டை விரலும்
2. விலாசம்
3. தகவல் தருபவர்
4. ஒரு தெருவும் சில பச்சை வீடுகளும்
5. பக்கத்து வீட்டில் தங்கியிருந்த அந்தக் குறத்திக் குடும்பங்களுக்கு
6. தொன்மை
7. எப்பவும் எம்மை அடக்கி வைக்கும் உனக்கு
8. ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீனம்
9. உனது ஆசிரியத்துவம்
10. My Computer
11. யா ஹபீப்
12. ஏமாற்றம்
13. காதலும் இயற்கையும்
14. கோடை
15. அமீருக்கு
16. மழை
17. பெண் சாதிகள்
18. நீ படிக்க வேண்டிய பாடம்
19. நூற்றியொராவது நபர்
20. தொட்டி போகன் வில்லாக்கள்
21. நல்ல மனிதர்கள்
22. மரண வீடு
23. குளம்
24. ஓர் ஆசிரியனின் மரணச் செய்தி
25. குப்பை வீசுதல்
26. சொல்லாமல் போன பதில்
27. அன்புத் தங்கச்சி
28. எனது பாடசாலை
29. என்னவருக்கு
30. பிரிந்து போன சாச்சிக்கு
31. டீவி செய்திகள்
32. முன்னம் நாம் வளர்த்த மரம்
33. மகனே

34. குஜராத் பூகம்பம்
35. போர்
36. குடித்தனம்
37. பழைய மாணவன்
38. Menopause
39. ஐந்து தரிசனங்கள்
40. கனவு
41. உன்னதமான என் நண்பன் நீ
42. என் எதிரிக்கு
43. என் எதிரியின் மனைவிக்கு
44. உனக்கு காது குத்திய ஞாபகம்
45. பிச்சைக்காரி
46. ஒப்பீடு
47. கோழிக்குஞ்சு வளர்க்கும் மகளே...
48. எனது பிரதி
49. முன்பக்க ஞாபகங்கள்
50. மதில்கள்
51. இருட்தேர்
52. எதிர்காலம்
53. ****
54. முகங்கள்
55. தனிவழி
56. பிள்ளை விளையாட்டு
57. எம் பெண்டிர் நிலை
58. சகோதர பாசம்
59. பழைய நினைவுகள்
60. நான் வளர்த்த ஒரே கோழிக்குஞ்சு
61. கேள்விகள்-அறிவுரைகள்-ஆலோசனைகள்
62. விஷ்வாசனீய வெனசக்( நம்பிக்கைக்குரிய மாற்றம்)
63. கடன்
64. செருப்பு தைப்பவள்
65. சைக்கிள் ஓட்டுதல்
66. பாதை தெரியுது பார்
67. பெண்
68. அனுமானம்
69. வேண்டாத கர்ப்பம்
70. சின்ன மகளின்சின்ன ஆசை
71. ஓ அட்மிரா... ஓபொஸ்கோ...!

# கடியானும், கட்டைவிரலும்

மூடிய திரைகளூடே பார்க்கும் கண்களே,
படிந்த பாசிகளூடே பார்க்கும் இதயமே,
புரியும் விஷங்களூடே ஊரும் நச்சரவமே,

நீ என்னைத் தீண்ட முடியாது.
உனது முகமூடிகள் என் உள்ளத்து ஒளியை
நெருங்கவும் முடியாது.

நல்லவனாய் இருப்பதாலேயே
பலதடவை காயப்பட்டாலும்
நல்லவனாய் இருத்தல் மீதான வேட்கையை
இன்னும் துறக்கவேயில்லை.
கடியானை எடுத்து கரையில் விட்டபின்பும்
கடிக்கும் கடியானின் உறுதியைவிட
மிஞ்சியதாய் எனது உறுதி...!



# விலாசம்

ஒவ்வொரு முகத்திலும்
ஒரு விலாசம் தெரிகிறது.
சிலது ஒளிமயமாய் இருக்கிறது;
சிலது இருள்மயமாய்;
சிலது ஒளியும் இருளும் கலந்து;
சில இருளும் ஒளியும் கலந்த வண்ணம் காட்டி;
இருள் கூடி ஒளி கலந்து,
ஒளிகூடி இருள் கலந்து.

சில எம்மைச் சரியான இடத்திற்கு
இட்டுச் செல்கின்றன.
சில இடைநடுவில் விட்டுச் செல்ல,
சில வழிதவற வைக்கின்றன.

எப்படியிருப்பினும் ஒளியின் வடிவம் பூசி
இருளின் அந்தகாரத்தில் அடைந்த
உனது விலாசத்தை
ஏனோ மறக்க முடியவில்லை.
பார்வையில் சுட்டெரிக்கின்ற
பொறாமை நெருப்புகளுக்கும் மேலே
நீ பனி தடவிய பாதை காட்ட,
சிலிர்த்துப் பயணித்த நாம்
இடையில் இருட்சகதியில் வீழ்ந்தோம்.

ஏனோ உனது
முகத்தின் ஒளி விலாசம்
இன்னும் கண்ணில் நிறைந்திருக்கிறது.

ஜீவநதி கவியில் உறவாடி - ஒக்டோபர் 2011

# தகவல் தருபவர்

எப்போதும் எமக்கு
தகவல் தரும் அன்பரே,
உங்கள்
தகவல்கள்
பாலைநிலப் பெருநிழல் எமக்கு;
உங்களைப்போலவே
பெறுமதியானவை எமக்கு.
எம்மைச் சூழ
யாருமில்லாத வனாந்தரத்தில்
பொறாமை மிருகங்கள்
குதறப் பார்த்திருக்கும்
மயானத்தில்
எம்மைக் காப்பதும்,
எம்மைத் தலை நிமிர வைப்பதும்.

நீண்ட கரங்களால்
பிறருக்கு இடும்போது
எம்மையும் சேர்த்துக் கொள்கிறீர்கள்.
எப்பவும் எங்கள் பாத்திரம் நிறைக்கும்
முதல் கரம்
உமதேயாக!

# ஒரு தெருவும் சில பச்சை வீடுகளும்

குப்பைகள் இழுத்துக் குதறப்பட்ட வீதிகளின்
தூசிச்சுழல் மேலே படர்ந்து
நாசியின் உறுதியை சரிபார்க்கிறது.

வெட்டப்பட்டுப் பாறிக் கிடக்கும்
இதுவரை நிழல் தந்த மரத்தின்
அடித்தண்டிலிருந்து
கண்ணீர் சொரிகிறது.

மரமாய், குலையாய், இளநீராய்க் காய்த்த
தென்னை மரம் ஒன்று
யாரோ ஒருவனின்
புதுவீட்டு அத்திவாரத்தின் முன்னால்
துண்டு துண்டாய்
எரிந்து கிடக்கிறது,
தோற்றுப்போன சினிமா வில்லனின் பதுங்கிடம்போல.

shopping bagகளுக்காக
வைக்கப்பட்ட நெருப்பின்மேலே
கனிதூங்கும் கொய்யா மரத்தின் கிளை
வாடிக் கருகிக் கிடக்கிறது
செய்யாத பாவத்தை அனுபவிக்கும் நிரபராதியாக.

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நேரத்தில்
ஒவ்வோரிடத்தில்
வைக்கப்படும் தீ
வானம்வரை நழுவுவதாக பேய்க்காட்டி
இறுதியில்

என் வீட்டு ஜன்னலுக்குள் நுழைகிறது
ஒரு கள்வனைப்போல.

வேலியோரமாக எட்டிப் பார்ப்பதால்
எப்பவும்
பெரியவர்களின் கை வீச்சுக்கும்,
சிறியவர்களின் கல் வீச்சுக்கும்
வாகனங்களின் தலை வீச்சுக்கும்
ஆளாகும்,
பூப்பூத்த என் மாமரம்.

செம்மண் காவியுடை போர்த்து
தவம் செய்யும் என் வீதிச் செடிகள்
'என்னைக் கழுவேன்' என்று
வானத்தைக் கெஞ்சுகின்றன.

தொலைக்காட்சியும் செல்லிடப்பேசியும்
சினிமாவும் பாட்டும்
இலத்திரனியல் பின்னல்களும்
குறிபார்த்து விரித்த வலையில்
சிக்கித் தவிக்கிறது
திசையறியா பிஞ்சுகளின் எதிர்காலம்.

எதிலுமே கறைபடாத வெள்ளிநிலா
ஒளித்துச் சிரிக்கிறது.

தீவநதி புரட்டாதி - ஐப்பசி - 2009

## பக்கத்து வீட்டில் தங்கியிருந்த அந்தக் குறத்திக் குடும்பங்களுக்கு...

ஓரிரவில் வந்து
எமது குடித்தனங்களின்
மௌனம் கலைத்து
பக்கத்தில் பாழ் அடித்து நின்ற
வீட்டைச்
சுத்தம் செய்தீர்கள்.

கசமுசாவென்ற உங்கள் பாஷைகளூடே
என் திண்ணையிலும்
விளையாடித் திரிந்தன
உங்கள் குழந்தைகள்.

நுளம்புகள் ரீங்காரித்த
மரத்தடியில் சுகமாய் உறங்கி
ஓரிரவுக்குள்ளேயே சண்டை பிடித்து
மண்டை உடைத்து
மருந்தும் கட்டிக் கொண்டீர்கள்.


நீர் தரும் வழிகளை
நாம் மறைத்து விட்டபோதும்
விடிகாலைக் கதிரோடு எழுந்து
ஊருணியில் குளித்து வந்து
சில போத்தல் நீரோடு
தேவைகளை
முடித்துக் கொண்டீர்கள்.
“அவர்களைப் பார்க்காதே.
வாய்க்குள்ளிருக்கும்

மாய அரிசியை வீசி
கோழி பிடிக்கும் கூட்டம்.."
என்று என் மகளுக்கு
நான் சொல்லிய கதைகளைப்
பொய்யாக்கிப் போயிற்று
பளபளக்கும் பட்டும்,
இமிடேஷன் நகைகளும் பூண்டு
அழகிய டொல்பின் வேனில் ஏறி
நீங்கள் எம்மைக்
கடந்து சென்ற காட்சி!



மல்லிகை 43வது ஆண்டு மலர் - 2008

# தொன்மை



நிஜ
அம்மா - அப்பா விளையாட்டு
விளையாடி
ஓய்ந்துபோன
என்முன்னே,
என் குழந்தைகள் விளையாடின
அம்மா-அப்பா விளையாட்டு.

# எப்பவும் எம்மை அடக்கி வைக்கும் உனக்கு

நீ கைகளை ஆட்டிப் பேசுவதும்
குரல் உயர்த்திக் கத்துவதும்
விழிகளை உருட்டி
பயங்காட்டுவதும்
எத்தனை நாளைக்கென்ற
கேள்விகள் ஊரும் நெஞ்சில்,
குழந்தைகளின் அன்பு வாசனையை அறியாத
உனது குழந்தைகள்
மழைக்கு நனைந்த
பொப்பிச் செடிபோல்
மளமளவென வளர்ந்து வருவதைக் காண்கையில்...


நீ சொல்கிறாய்
எப்பவும் நீ செய்வதே சரியெனவும்,
நீ சொல்வதே சரியெனவும்.
ஒரு திருடனைப் போன்று
உனது சகாக்களை ஏவிவிட்டு
எமது வீட்டுக்குள் நுழைந்து
எமது பலவீனங்களை ஆழம் பார்க்கிறாய்..

உன்னுடன்
பேசிச் சிரித்துச் சென்றாலும்
உனது நிமிர்வுக்கும், எடுப்புக்கும் மேலே
தீற்றியிருக்கின்ற
சகதியின் பீற்றல்
பளீரிடும் எமது கண்களில்...!

# ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனம்

சீனி டப்பிக்குள்
கதை பேசித் திரிகின்ற,
கை கோர்த்து அலைகின்ற,
கல்யாணம் கட்டி
குடித்தனம் நடத்துகின்ற
இந்த எறும்புகளில் சில
சிக்கிக் கொள்ளும் என் கரண்டிக்குள்.


கொதிக்கும் தேநீரில்
இடுவதற்கு முன்பு
பல தடவை முயற்சிக்கிறேன்
அவற்றைக் காப்பாற்ற முடியுமாவென.
முடியாதபோது
தேநீரில் செத்து மிதக்கும் எறும்புகள்.
டீவி செய்தியில்
இடையறாது ஒலிக்கும்
பலஸ்தீன மண்ணின்
மரண நிலவரம்!



# உனது ஆசிரியத்துவம்

பின்னர் எத்தனையோ முறை
முகத்தைப் பார்க்கிறாய்;
கதைத்துப் போகிறாய்;
தேவையற்ற எத்தனையோ
விடயங்களைக் கொண்டு வந்து
என் முன் போட்டு
என் மௌனம் கலைக்க முனைகிறாய்.

நீ எத்தனை குஸ்தி அடித்தாலும்
என்னுள்
கலங்காமல் பதிந்து இருக்கிறது,
எனது அழகிய சிரப்பை
ரசிக்கத் தெரியாமல்
அதற்கு ஒப்பிட்டு
நீ கூறிய
அந்த உவமை...!
அந்த உவமை...!




வேலிகளைத் தாண்டும் வேர்கள் - அநுராதபுர மாவட்ட தமிழ்க் கவிதைகள் தொகுதி- 1 - ஜனவரி - 2010

# My computer

எத்தனை முறை யோசித்தாலும்
புலப்படுவதாயில்லை.
உட்பகுதிகளை மாற்றுவதா?
உருவத்தை மாற்றுவதா? ஒளித்து வைப்பதா?
உற்றார் ஒருவர் தலையில்
கட்டி விடுவதா?

அனுதினம்
நகர் காவலர் வரவை எதிர்பார்த்து
விறைத்துப் போர்த்திருக்கும்
நான்
ப்ளக்மார்கட் என்று அறியாமல்
சந்தோஷமாய் வாங்கி வந்த
அந்தக் கம்ப்யூட்டர்.



# யா ஹபீப்

ரோஜாவைத் தொட்டேன்
விரலில் வாசம் நிலைத்தது
நாள் முழுதும்.

உன்னைத் தொட்டேன்,
மனதில் வாசம் நிறைந்தது
ஆயள் முழுதும்!

# ஏமாற்றம்

வாய்க்கால் கரையோரம்
வளைத்து நின்ற
சேம்புக் குழாம் சிரித்தன
இன்றோர் சுபதினமாம் என்று.
கண்கள் தலைவாசல் நோக்கின
உன் சோபனம் எதிர்பார்த்து.
நீ வரவில்லை.
உன் ஞாபகத்தில்
தவித்துக் களைத்தது
கிள்ளை.

சேற்று வயல் வெளியில்
விரல் செதுக்கிய சிற்பம்
செம்புனலில் கரைந்தோடிற்று,
வான்மேகம் பொழிந்த
பெருமழையில்.

# காதலும், இயற்கையும்

சில்லென்ற குளிர்காற்று!
உலகம்
குளிர்ப் போர்வை போர்த்திருக்கிறது.
உன் அன்புப் போர்வை என்மீது விழுகிறது.
அதற்குள் என் ஆன்மா
இதமாக ஒடுங்கிக்கொண்டது.
அதன்பிறகு
எங்கும் குளிரே இல்லை.
அன்பே!
உன்னை நன்கறிவேன்.
இந்தத் தனிமை,
மரப்பசுமை,
புல்லின் வளமை,
பறவைக் கானம்,
கீழ்வானப் பொற்கதிர்
யாவும் உன் காதலையே
எனக்குப் பல வழிகளிலும் பரிச்சயப்படுத்துகின்றன.
என் பாதத்தை நீராட்டும் புல்லின் பனித்துளிகள்....
அவைகூட
உன் அன்பின் குளிர்ச்சிக்குத்தான்
அடையாளம் ஆகின்றன.
இங்கு நாம் கழித்த கணங்கள்
கொஞ்சம்தான்.
ஆனால்,
இந்த மண்ணின் ஒவ்வொரு துளியும்
நம் காதலைப்பற்றித்தான் பேசிக்கொள்கின்றன.
எனக்குக் கேட்கிறது.
உனக்கு...?

# கோடை

வெறித்த சாலைகளில்
விரித்த மணல் திட்டுகளில்
அழுகலின் மணம் தோய்த்து
அலைந்துவரும் காற்று.

புத்தம் புதிய மேக்-அப்புகளை
தன் புழுதிக் கரங்களால்
தொட்டுச் சுவைத்துப் பார்ப்பதிலும்,
ஆடையை உயர்த்திச் செல்வதிலும்,
குடையை சரித்துக் கொள்வதிலும்,
இந்தக் காற்றுக்கு எத்தனை ஆனந்தம்!

காலையில் விழுங்கிய
நீர்ச்சாதம் செறித்த
வியர்வையின் தூறலூடே
புழுதி கசங்கிக் கசங்கி
காலை வாரும்
பகிரங்கப் பொழுதுகளில்
வலியை மறைத்து
இரவு வானின் வெளிர் வண்ணம் காட்டி
மெல்லப் புன்னகைக்கும்
பித்த வெடிப்புகள்.

தீவநதி 3ஆவது ஆண்டு மலர் ஐப்பசி 2010

# அமீருக்கு...

வியர்வையில் கசிந்த வெள்ளாடையும்,
நரைத்துச் சிரித்த தலைமயிரும்,
கறுத்துக் கவிழ்ந்த கண்களும் கொண்டு
எம்மை நீங்கள்
தாண்டிச் செல்லும்போது
எமது மனங்களில் ஒலிப்பதென்னவோ,
அண்மையில்
உங்களுக்குப் பிறந்த
பன்னிரண்டாவது குழந்தையின் குரலே!

# மழை

இரவெல்லாம் முகங் குழையும்
இள மனைவியின் சில்மிஷம்போல்
ஜன்னல் வெளியெல்லாம்
தோட்டத்துச் செடிகளின்
மஞ்சன நீராடல்...

கூரையெல்லாம் வானாகப் பொத்தல் விழ,
தரையெல்லாம் சுனையாக ஊற்றெடுக்க,
நெஞ்சின் ஓரமெல்லாம் வலியெழுப்பும்
பக்கத்து அகதி முகாம் குடிசைகள்.

# பெண்சாதிகள்

ஊரே உறங்கும் பொழுதுகளில்
உமக்கென விழித்து உழைத்தவர் நாம்.
சுரண்டி உமையுறிஞ்சிய மாந்தர்தம்
கேண்மை நீக்கி வேலியிட்டோம் நாம்.
தன்னந்தனித் தீவாய் நின்றிருந்தீர்
தோணியாய்ப் பாலம் அமைத்தோம் நாம்.
இராக்கள்தோறும் இன்பப்பயிர் வளர்த்து
இதயத்து ஒத்தடம் இட்டோம் நாம்.
அறுசுவை உண்டி, ஆடை, அணிமணி
நேர்த்தியாய் வழங்கிய பாரிகள் நாம்.
நீரே உறவென நிழலொதுங்கி
அடுத்தார் பகை அஞ்சா தெதிர்த்தோம் நாம்.
இத்தனையோடும் இரங்கா உம்மில்
நேசம் சிறிதும் மாறோம் யாம்.

# நீ படிக்க வேண்டிய பாடம்

பாடம் படிக்கவேண்டியது நானல்ல,
கல்வியிலும் கலையிலும்
நான் படித்தவை
நீ காணக்கூட இல்லை.

உன்னைவிட கயவர்கள்
நான் கண்டதில்லை.
என்றாலும்,
உன்னளவுக்கு பாடம் கற்பிக்க
என்னாலும் முடியும்.


சிரிக்கும்போது நெருங்குவதும்,
சிரிக்காதபோது நெருக்குவதும்,
உன் பரம்பரைக் கலை;
உன்னைப் போன்றவர் கலை.

தோற்றத்தில் பூவாய்,
பேச்சில் எளிமையாய்
பரவி நின்றாலுமே
மகா சக்தியும்
அழிக்கமுடியாச் சுடரும்
பெண் என்பதே
நீ படிக்க வேண்டிய பாடம்!

# நூற்றியொராவது நபர்


ஒரு நல்லவனைப்போல நடித்து
அருகில் வருகிறாய்.
நான் கேட்காதபோதும்
உதவிகள் செய்கிறாய்.

என்றோ ஒருநாள்
நீயும்
என் பட்டியலில் சேர்ந்த
நூற்றியொராவது நபராய் மாறுவாய்,
என் பெண்மையை,
என் மென்மையை
ஆராதித்து அருகே வந்து,
நான் எதுவும் கண்டுகொள்ளாததால்
அல்லது எதற்கும் வளைந்து கொடுக்காததால்
என்னைத் தூற்றித் திரிகின்ற
மற்ற நூறு பேரையும் போலவே.



# தொட்டி போகன்வில்லாக்கள்

அன்னையின் தோளிலிருந்து கைநீட்டுகிறது
பச்சைக் குழந்தை.
ஓ...! உடம்பெங்கும் பூக்கள்...
வெள்ளை, சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், ஊதா...
மரகத இலைக் கோபுரங்கள்...
முட்கள் அதிகம்தான். ஆனாலும்
பிஞ்சுக் கையை முறித்துவிடாதீர்கள்,
உங்கள் கத்தரிக்கோல்களால்...



# நல்ல மனிதர்கள்

அம்மாவின் முன்னே
நல்ல பிள்ளையாய் நடந்து
அவள் கண் மறைந்த உடனே
டப்பாவுக்குள் கை நீட்டி
சீனி அள்ளித் தின்னும்
குழந்தையைப்போல
யாரும் இல்லாத தனிமையில்
வாலை நீட்டுகிறீர்கள்.
"கற்பெனப்படுவது சந்தர்ப்பமின்மையே"
ஷேக்ஸ்பியர் கூற்றை நிரூபிக்கிறீர்கள்.
வீட்டிலே பத்தினிகளைப் படிதாண்டாமல்
பர்தா போட்டு மூடிவைத்து,
வெளியே வேலைக்குச் செல்லும் கண்ணகிகள் மீது
கதை கட்டுகிறீர்கள்.
வாய்பேசாத ஊமைகள் என்றறிந்து
ஜாதிப்பூவைக் கிள்ளுகிறீர்கள்.
எதிர்பார்த்திருக்க மாட்டீர்கள்,
உங்களது ஆண்மை உறை கிழிந்து
துருத்தும் கோழைத்தனங்கள்
பக்கத்திலுள்ள
ரோஜா முட்களின் கீறலாலேயே
வெளிப்படும் என்பதை.

# மரண வீடு

அந்த மரண வீடு
இதுவரை கிடைத்த
வெற்றிகளைச் செரித்து
கழித்துக்கொண்டிருக்க,
நாற்புறமும் மோதி
ஒதுங்கும் சனக் கூட்டம்
அங்கலாய்த்து,
ஆயிரம் கதை பேசி
அலுத்து வெளியேற,
இருள் கப்பிய முகத்தோடு
பாட்டி வழங்கிய புட்டிப்பாலை
உறிஞ்சியிழுக்கிறது,
பிறந்து ஒரு மணித்துளிக்குள்
பெற்ற தாயை இழந்த
பச்சிளம் சிசு.

# குளம்

எப்பவும்
உங்களது கழிவுகளை வீசிய
சின்னக் குளம் இது.
நீங்கள் வீசியெறிந்த
யாதொரு பொருளையும்
இழந்ததில்லை இது.

எனது ஞாபகங்களில் பதிந்து கிடக்கும்
கீறல்களில் தூசி படிந்திருந்தாலும்,
மீண்டும் கழுவிக்கொள்ள
செல்கிறோம் இக்குளத்திற்கே.

இதன் ஞாபகமே
உங்களிடம் இல்லை எனுமாப்போன்று,
ஒரு இனிய சகாபோன்று
என்னை நடத்தி
நீங்கள் பேசிச் சிரிக்கும்போது
உங்களது ஞாபக சக்தியின்மீதோ,
அல்லது
உங்களது குணவியல்புகள் மீதோ
மீண்டும் ஊரும்
கரப்பான் பூச்சிகள்
வந்து விழுகின்றன
மீண்டும் இந்தக் குளத்துக்கே.

# ஓர் ஆசிரியனின் மரணச் செய்தி

உங்களது மரணச் செய்தி
எதிர்பாராது வந்த சுனாமிபோன்று
எம்மை அலைக்கழித்தது.

எமது நீண்ட
நெடுந்தூரப் பயணத்தில் - இடையே
சிற்சில தரிப்பிடங்களில் மட்டுமே
உங்களைச் சந்தித்திருக்கிறோம்.

அப்பொழுதெல்லாம்
ஒரு வழிப்போக்கனைவிட - அதிகமாகவே
எம்முள் உறைந்துவிட்டீர்கள்!

நச்சுத் திராவகம்போன்று
எம்செவிகளில் ஊற்றப்பட்ட
உங்களைப்பற்றிய வதந்திகள்
உங்கள்மீதான விசுவாசம் சுட்டவுடன்
நொடிப்பொழுதில் ஆவியாகிப் போயின.

உங்களுடனான
எமது சந்திப்பின் இடைவெளி
மிக நீண்டுவிட்டது என்ற
ஆதங்கத்தையும், தற்காலிகமாகவாவது
எங்களது பட்டியலில் எப்படியோ நீங்கள்
விடுபட்டுப் போனீர்கள் என்ற கவலையையும் தவிர
இன்னும் நம்ப முடியவில்லை,
உங்களை மூர்க்கமாகத் தாக்கிய
நோய் அரக்கன்
வெற்றிகொண்டான்
என்ற செய்தியை...

அநுராகம் ஜூலைஆகஸ்ட் 2006

# குப்பை வீசுதல்

மாய ஒளி சிந்தி
முகில்கள் வளைந்தாடும்
மாலைப் பொழுதின் கருக்கிருட்டில்
வெளியேறுகிறேன்,
குப்பை வீசுவதற்காக.

எதிர் வீட்டுக்காரி எதிர்ப்பட,
"இவள் என்ன இப்படியே இருக்கிறாள்?
எல்லாப் பிரச்சினைகளையும் சமாளித்து
சிரித்துக்கொண்டே இருப்பது எப்படி?"

அடுத்த வீட்டு ஆயிஷாவின் குரல்.
"ஆம்புளைகளுடன் சிரித்துப் பேசுறாளே
வெட்கமில்லாமல்..
ஐயோ, ஆண்களென்றால் எனக்கு
கரப்பான் பூச்சி போலாச்சே...!"

"முபாரக்கும்மா என்ன
ஒரு மாதிரி இருக்கிறாள்?
பிள்ளை உண்டாகியிருக்குமோ?
தேவைதான் ஐந்தாவது புள்ள..."

முக்காட்டை இழுத்து
முகத்தை மூடி
திரும்பி நடக்கிறேன்,
குப்பையை வீசிவிட்டு
குப்பையில் கிடந்து உழன்று நாற்றமெடுத்து
குப்பையாகிப்போன மனதுடன்.

மல்லிகை செப்டம்பர் 2010

# சொல்லாமல்போன பதில்

மதிலின் இடுக்கில்
ஒரு மாமரம் வளர்ந்தது.
நீரூற்றி நீரூற்றி வளர்க்காவிடினும்
தானூறி, தான் தேடி
தன் வேர் பரப்பும் மரம்.

நாளை நிலைத்து நிற்பது யார்?
வேர் கிளைத்த மரமா?
தூர் விட்டுப்போன மதிலா?

மதிலின் உறுதியில்,
அடங்காத தீரத்தில்
தலை வணங்கிய மாங்கன்று
கேட்டது,
"கருடா சௌக்கியமா?"

"யாரும் இருக்கும் இடத்தில்
இருந்து கொண்டால்
எல்லாம் சௌக்கியமே"

மதில் சொல்லாமல்போன பதில்.

# அன்புத் தங்கச்சி

உன்னை அள்ளியெடுத்து
அமுதூட்டினேன்;
ஆடை அணிகலன் தந்து
பூச்சூட்டினேன்.
அன்பும், இரத்த பாசமும் துறந்து
கயவனின் நிழலை
நீ
அடைக்கலம் கொண்டபோதுதான்
உனக்கான உரிமை எது
என்பதை நான் கற்றுத் தரவில்லை
என்பதுணர்ந்தேன்
அன்புத் தங்கச்சி..!

அல் மதீனா இதழ் 15 - 2006

# எனது பாடசாலை

நிரம்பி வழியும்
வகுப்பறைகளுக்குள்ளே
தேடுகிறேன்,
என்னையொத்த ஒரு மாணவியை.

ஆங்காங்கே
முகிற்கூட்டம்போன்று
கூடி நின்று பேசுகின்ற
ஆசிரியர்களிடையே தேடுகிறேன்,
என் குருவையாத்த ஒரு குருவை.

# என்னவருக்கு

இத்தனை நாளும்
நீங்கள் தொட்ட உடல்
உங்களது கனல் மூச்சில்
எந்தக் கிளுகிளுப்பும்
கொள்ளவில்லை இப்போதைய
தாம்பத்திய அவசங்களில்.

எப்பவும்
வழக்கம்போல
வீடு நுழைகிறீர்கள்;
குழந்தையோடு பேசுகிறீர்கள்;
படுக்கை தட்டி விரித்து
எனக்கும், உங்களுக்கும்
வேறாக இடுகிறீர்கள்;
காலையில் அழகாய்
தட்டி மடிக்கிறீர்கள்;
நள்ளிரவுவரை விழித்து
டீவியும் பார்க்கிறீர்கள்.
எப்பவும் உங்களை
அருகிருந்து பார்த்திருக்கும்
என்னுள்ளே ஏங்கும் மனம்
ஏன் உங்களைப்போல
நான் இல்லையென.

# பிரிந்துபோன சாச்சிக்கு...

முப்பத்தைந்து வருட
தாம்பத்திய வாழ்க்கை முடித்து
நீ விடுதலை பெற்றாய் சாச்சி.
முப்பது நிமிடம்கூட
தாக்குப் பிடிக்க முடியாது
உன் கணவரின் அடிக்குப் பயந்து
தப்பிவந்த என்னிடம்
உனது முப்பத்தைந்து வருட
குடும்ப வாழ்வு பற்றிய சித்திரம்
மாறி மாறி வந்து விழும்,
அடியாக...
உதையாக...
கண்ணீரை வெளியே விடாது
நீ கட்டிக் காத்த
குல கௌரவமாக...!

# டீவி செய்திகள்

நேற்று
தொலைக்காட்சியில் பார்த்த
போரில் காயம் பட்ட
அந்தச் சிறுவனின்
கசங்கிய அழுகுரல்
கேலி செய்கிறது
பிரமாண்டமான எமது சாதனைகளை,
காலத்தின் சாந்த முகத்தில்
கோரக்கோடுகள் இழுத்த
எமது அறிவியல் வெற்றிகளை!!




# முன்னம் நாம் வளர்த்த மரம்

வேரின் குணம்
மரத்துக்கும் இருக்கும்
என்று நீ நம்புவது தெரிகிறது.

கவிதைகள் புனையும் என்னிடம்
திரும்பத் திரும்ப கேட்கிறாய்
கவிதை எழுதுவதில்லையா என்று.

மக்கி உதிர்ந்துபோன இலைகள்
மீண்டும் உயிர் கொள்வதில்லை என்றும்,
அவை உரமாக மட்டுமே ஆகும் என்றும்,
என்னுள் சொல்லிக் கொள்கிறேன்.
மீண்டும்
உறுதியாகவே நிரூபிக்கிறேன்,
வேரும், மரமும்
வேறு வேறென.



# மகனே...

கண்ணெதிரே வந்தது ஒரு பேய்,
கண்ணை மூடிக்கொண்டேன்.
காதுக்குள் புகுந்தது விஷக்காற்று,
இறுகப் பொத்திக் கொண்டேன்.
யாரும் எதுவும் சொல்லட்டும்;
உன்னை அவைகள்
கலைத்திடாது காப்பேன்.
பிசாசுகளும், விஷக்காற்றுகளும்
தாய்மையை
எதுவும் செய்வதில்லை மகனே...

*****

பகலெல்லாம் புழுதியில் ஆடி
மாலை களைத்து,
கட்டிலில் வீழ்ந்து கண் சொருக
"உம்மா, நாளைக்கி உனக்கு ஸ்கூல் இருக்கா?"
என்று கேட்கும் உன்னிடம்
நான் சொல்வதற்கு
என்ன இருக்கிறது?
ஒரு வட்டம்கூட வரையத் தெரியாத
ஆனால்,
விளையாட்டும், குதூகலமும் நிரம்பி வழிகின்ற
உன் பிஞ்சு உள்ளத்தின்
கனவுகளின் வெம்மையை
நீ சுமக்கும் கூடைக்குள்ளிருந்து
பிரித்தெடுத்து இந்த உலகத்தில்
எப்படி விடுவேன்
என்ற கவலையைத் தவிர...?

*****

நீயில்லாத நாட்களில்
சுதந்திரமாக நடமாட முடிகிறது;
பாதி படித்த புத்தகத்தைக்
கவிழ்த்து வைக்க முடிகிறது;
எழுதிய பேப்பரின்மேலே
பயமின்றி பேனையை
வைத்துச் செல்ல முடிகிறது;
மெல்லிய குரலில் பேசி
காரியங்களைச் சாதிக்க முடிகிறது.
எனினும்,
நீயில்லாத வெறுமை நிரம்பிய
மனக்குடத்தில்
நிம்மதி என்னும் தண்ணீர்
நிறைவதேயில்லை.

# குஜராத் பூகம்பம்

தவழ்ந்து வரும்
உன்னைக் காண்கையில்
களிப்பு பொங்குகிறது;
கூடவே,
தவழவே முடியாது
ஊனமாகிப்போன கால்களுடன்,
களிப்பதற்கும் யாருமின்றி
தவித்து நிற்கும்
பிஞ்சுகளை எண்ணுகையில்
கண்ணீரும் பொங்குகிறது.



# போர்

கொழும்புக்குச் சென்ற
தந்தையைக் காணாமல்
அழும் மகனைக் கண்டு
அழுகிறேன்,
நெடுந்தூரப் பயணத்தில்
தம் தந்தைகளை இழந்து தவிக்கின்ற
எத்தனையோ சிறுவர்களின்
ஞாபகமாக...



# குடித்தனம்

கதவைத் திறந்தால்
துள்ளி வருவேனென
சேதி சொல்லி அனுப்பும்
ஆடி மாதக் காற்று.

தென்னை இளங்கிளிகளின்
கதம்பக் குரல் மீறி
என்னைப் பயமுறுத்தும்
என் கூரை அருகிருக்கும்
தென்னம்பழம்.
கேஸ் வாயுவினூடே
கசியும் தணல் மீதில்
வேகும் உணவினைப்போல்
வியர்வையில் குளித்த உடம்பினுள்ளே
அழியும் மனசின் ரம்மியங்கள்.

மூடிய ஜன்னலுக்குள்ளே
மூச்சுக்காற்று நிறைந்து
ததும்பி வழியும்
சமையலின் வாசனையும்,
என் மனோரதியங்களும்.

உதயகாலக் காற்றை வேண்டி
உள்ளம் ஏங்கினாலும்,
திறந்த கதவு வழியே
சிதறிப்போகும்
கேஸ் பற்றிய சிந்தனை.

*****

பெரும்பாலும்
குளத்தில் வீழ்ந்த கல் நான்
நீங்கள் என்னைச் சுற்றி
அலைவட்டம் எழுப்புகிறீர்கள்.

கீழே விழுந்து காயப்பட்டுத் துடிக்கும்
குழந்தையின் கண்ணீரைப்போல
என் விழிகளில் ஒழுகும்
வாழ்க்கைக் காயம்
தந்த கண்ணீர்.

அப்பப்போ
ஆஸ்த்துமா, பீனிசம், பிரஷர்
இத்யாதிகளுடன்
சதாவும் ஓடும்
வலிப்பு என்னும் ஓடம்.

அடிக்கடி தடம் பதிக்கும்
நம்பிக்கைக் காற்று
சிலவேளை கலையும்
சுட்டித்தனங்களால்.

குழந்தைகளின்
கண்மணிகளில் தேக்கிய
எதிர்காலக் கனவுபோல
மிக விரைந்தே
பறக்கும் பருவம்.

# பழைய மாணவன்

உன்னிடம்
கையை நீட்டுகிறேன்;
முகத்தைத் திருப்பிக் கொள்கிறாய்.
நான் வரும் பாதையில்
எப்பவும் விலகி
எதிர்த்திசையில் செல்கிறாய்.

என்னைக் காணும்போது
வீதியில் எல்லாக் கதவுகளும்
திறந்துகொள்கின்றன.

உனது கதவோ
மூடியே கிடக்கிறது.
ஒரு கொள்ளைக்காரனுக்கு அஞ்சி
இறுக மூடியதுபோல்
இருக்கும் அது,
நான் இதயங்களைக்
கொள்ளை கொள்வது குறித்து
உனக்கிருக்கும் பயத்தை
நிரூபிக்கிறது.

சொல்.
மழைத்துளியின் சிலிர்ப்பை விரும்பாத
மலர்க்கொடியா. நீ?
வரண்டு காய்ந்த
உனது நிலத்தில்
ஒரு துளி நீராய் விழுந்தேன்.
இனியும் என்னை நிராகரிக்க முடியுமா நீ?

# menopause

மாதந்தோறும் வலியில் துடித்து
**menorche** வட்டத்தில்
திமிறிய வயிறு
தன் வளமிழக்க
கருப்பை
தன் வாழ்வு முடித்த ஒரு போதில்,
கண்ணீர் சிந்தி
மறுபுறம் திரும்பிப் படுத்த
சின்னம்மா
அடுத்தநாள் கண்விழித்தாள்.
கையிலிருந்த மகளை நீட்டினேன்
"ஐயோ, பெண்குழந்தை!
நாளை அதுக்கும் வருமே
இந்தக் கதி...!!"
அழுதரற்றி
முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அநுராதபுர மாவட்ட தமிழ்க் கவிதைகள் தொகுதி- ஒன்று ஜனவரி - 2010

# ஐந்து தரிசனங்கள்

இவ்வளவு காலமும் வாழ்ந்த
இந்த வீட்டைப் பிரிதல்
துக்கமில்லை எனக்கு,
விடுதலை சாத்தியமெனில்.

***

எப்படிப் பார்த்தாலும்
உங்கள் மீதான
எனது வெற்றியை
நிரூபித்தே கடக்கின்றன,
உங்களது இந்த
என் மீதான
அசூயைகள்,
வஞ்சனைகள்,
பொறாமைகள்,
புலம்பல்கள்...

***

குப்பையை அள்ளிச் செல்லும்
இந்தக் காற்று
இதயத்துக் குப்பையையும்
அள்ளிச் செல்லுமெனில்...?
சோவெனப் பொழிகின்ற
இந்த மேகம்
உள்ளத்துக் கறைகளையும்
கழுவிச் செல்லுமெனில்...?

***

இன்னும் நீ
நவீனமாக வேண்டியிருக்கிறது.
பற்றிப் பிடித்திருக்கும்

மரபுக் கயிற்றை விட்டுவிட்டு
இன்றைய உலகோடு
இணைந்து வாழக் கற்றுக்கொள்.
உள்ளே ஒலித்த
என் மௌன சிந்தனைக் குரலை
உடைத்தது,
ஐந்து வயதுப் பிஞ்சு மகனின்
இசைக் குரல்,
“கண்ணே கலைமானே,
கன்னி மயிலென
கண்டேன் உனை நானே...!”

***

தந்தையின்
கனக்கும் பெரிய செருப்பை
அணிந்து நடைபயிலும்
சின்ன மகளே,
பெரிய செருப்பு
அணிந்தே ஆகவேண்டிய
ஒரு காலத்தில்
உன் சின்ன பட்டுப் பாதணியை எண்ணி
ஏங்கமாட்டாயா?
உன் தந்தையைப்போல,
என்னைப்போல.

# கனவு

என் கன்னத்தில் வீழ்ந்த
பனித்துளியே,
என் நெஞ்சினில் கொஞ்சிடும்
நிம்மதியே,
இயற்கையின் எழில் முகமான
காலமா நீ...?
என் காயங்களை ஆற்றுவதெப்படி?

சட்ட வரம்புகளை
மீறித் தகர்த்தவள் நீ;
சம்பிரதாய எல்லைகளைத்
தாண்டிக் கடந்தவள் நீ;
உன் முகவிலாசம்
ஊறித் திளைத்த கண்களின் முன்னே
காலத்தின் கோடுகள் கடந்தும்
நிற்பாய் நீ.



உன் நிழலில் வாழணும்
என்ற எண்ணம்
எனக்கில்லை மகளே,
உன்னைக் கொஞ்சும் சுகமே
கோடி பெறாதா?

தங்க நகைகள்
தரமாட்டேன் உனக்கு,
மனிதரின் பெறுமதி
நீ அறியும்வரை.

ஆடைகள் அணிவித்து
அழகுபாரேன் உனக்கு,
ஆடவர் உள்ளம்
சரியாக இனங்காணும்வரை.

நீளக் கூந்தல் சீவி
பூ முடிக்க மாட்டேன் உனக்கு,
அழகின் ஆயுள்
அற்பமென்பதை நீ உணரும்வரை.

ஆண்களைக் கண்டு
பயந்தோடச் சொல்லேன்,
ஆண்கள் தோழர் என்றுணர்.

புன்னகைக்கக் கற்றுத் தருவேன்
இந்தப் பூமியை வெல்லும் கலையாக.
உயிர்களை நேசிக்கக் கற்றுத் தருவேன்
இறைவனை அடையும் வழியாக.
கல்விப்பாதை காட்டித் தருவேன்
தனியே நடக்கும் வீரத் துணையாக.

ரூஸோவின் சோபியல்ல நீ;
நபிகளார்; ரசித்த
ஆயிஷா சித்தீகா நீ;
பாரதியின் புதுமைப் பெண்ணும் நீ.
உனக்கு
அன்பு முத்தம் மட்டும்
மட்டின்றிப் பரிசளிப்பேன் கண்ணே...

# உன்னதமான என் நண்பன் நீ

அவன்
கதவை மூடினான்,
என் முகத்தில் அறைந்து;
நீ
இரண்டு கதவுகளைத் திறந்தாய்.

அவன்
பைத்தியக்காரி என்று
என்னைத் திட்டினான்;
நீ
புன்முறுவல் காட்டி
என்னை அரவணைத்தாய்.

அவன்
என் சகல உடைமைகளையும்
அபகரித்து
என்னை அபலையாக்கினான்;
நீயோ
ஒளி மிகுந்த
வாழ்க்கைப் பாதை காட்டினாய்.

என் உடம்பைப் பார்த்து
பல்லிளித்தான் அவன்;
நீயோ
பர்தாவினுள்ளே துலங்கும்
என் நேரிய இதயம்
ஏற்றாய்.

கோபத்தில் நான்
குமுறியபோதெல்லாம்
நான் என் தவறுணர்ந்து
மீண்டு வருவேனென
காத்திருந்தாய்.

வாழ்க்கையின் புதிய திருப்பத்தில்
நான் ஏகும்படி
அன்புச் சுடர் கொணர்ந்தாய்,
என் அசூயைகளையும், மாயைகளையும்
சுட்டெரிக்கும்படி.

இனி என்றென்றும்
என் உன்னதமான
நண்பன் நீ.

# என் எதிரிக்கு...

கணவனின்றித் தனித்திருக்கும்
பெண்களுக்கெல்லாம்
அனுதாபம் காட்டுகிறாய்,
அவர்களுக்கே தெரியாமல்
அவர்களது பெண்மையைச் சுரண்டியபடி.

உன் மனைவிக்கும்
அனுதாபம் காட்ட
ஒருவன் இல்லாமலா போய்விடுவான்
நீ இல்லாத ஒரு நாளில்...?

# என் எதிரியின் மனைவிக்கு

அவனுக்கு நீ
ஐஸ்வர்யா ராய்;
அவர்களுக்கு நீ
வல்லரசின் பார்வையில் விழுந்த
ஆசியா;
எனக்கு நீ
வீடென்னும் பொந்தில் வாழும்
வெறும் எலி.

# உனக்குக் காது குத்திய அனுபவம்

உன்னைத் தூக்கிச் சென்றேன்,
காது குத்துவதற்கு.
அறியாமல் சிரித்து நீ வந்தாய்.
நறுக்கென குத்திய வலியில்
நீ வீறிட்டழுதபோது
என் இதயம் நின்று போனது மகளே.

அறியாப் பிஞ்சின்மீது
வன்முறையைப் பிரயோகித்து விட்டேனா?
அறியாப் பருவத்திலேயே
என் கலாசாரத்தை
உன் மீது திணித்துவிட்டேனா?
ஆதிக்க முறையின் தடத்தில்
உன்னையும் இழுத்துச் சென்றுவிட்டேனா?
உன் கண்ணீர் நயனங்கள்
என்னுள் ஆயிரமாயிரம் கேள்வியெழுப்பின.

எத்தனையோ வலிகள்
பெண்ணுக்களித்தது உலகம்;
எத்தனையோ சிரமங்கள்
தாங்கச் சொன்னது சமயம்.
நானும் சேர்ந்து
வலிக்கவைத்து விட்டேனா?
நீ அறிந்தே
வலியை ஏற்கும்போது மட்டும்
காது குத்தியிருக்கலாமோ
ஷப்னம்?

மல்லிகை-- டிசம்பர் 2005

# பிச்சைக்காரி

தூங்கும் குழந்தையையோ,
பாதி செத்த குழந்தையையோ
கையில் ஏந்தி
பிச்சை கேட்ட அவளின்
கரங்களிலிருந்து விழுந்தன
சில்லறைகள்,
நோய்ச் சான்றிதழ் வழுகிய
ஓரங்களுடே.
கீழே குனிந்து எடுத்து
அவளுக்கு உதவ விழைந்த என்னைத்
தடுத்து நிறுத்தியது
கணவரின் குரல்,
"உனக்குத் தெரியுமா
கொழும்பு நகர பிச்சைக்காரர்களைப்பற்றி...?"



# ஒப்பீடு

வண்ணச் சுண்ணமெடுத்து
அழகழகு எழுதுகோல்களுடன்
புதிய புதிய கொப்பிகளில்
எழுதித் தள்ளுகிற குழந்தையை
என் இறந்தகால
வறுமை வடுக்களைத் தடவியபடி
பார்க்கிறேன்.
இன்றைய பிள்ளைகளுக்கு
எத்தனை வசதிகள்?

இதே கேள்வி
ஓங்கி ஒலித்து
மறைந்திருக்கும்,
எனது பிள்ளைப் பருவத்தில்
எனது தாயின்
பள்ளிப் பருவம் மீதான
ஞாபகங்களின் சுவடுகளோடும்...

மல்லிகை 43வது ஆண்டுமலர் ஜனவரி 2008

# கோழிக்குஞ்சு வளர்க்கும் மகளே...

குஞ்சைத் தூக்கிக் கொஞ்சிச் சுமந்து
திரிகிறாய்:
விளையாட்டு வார்த்தைகள் பேசுகிறாய்;
துள்ளிக் குதித்து
விளையாடுகிறாய்;
இரவில் பாதுகாப்பாக
உறங்க வைப்பதற்காக
கட்டில் அருகே வைத்துக்கொள்கிறாய்;
பூனை, காகம் பிடித்திடுமே என்று
பயப்படுகிறாய்.
இதே பயம்தான்
உன்னை நெஞ்சில்
சுமப்பதன்போதும்
என்பதை எப்படிச் சொல்வேன் மகளே...?
சுற்றி ஓநாய்களும், நரிகளும்
சூழ்ந்திருக்கும் காட்டில்
ஒரு மெல்லிய குஞ்சைத்
தூக்கிக் கொண்டு
நடப்பதன் கஷ்டம்
உனக்குப் புரிகிறதா மகளே?

நீ கற்றுத் தேர்ந்த
பண்டிதையாக வரவேண்டும்
என்ற பேராசை எனக்கில்லை.
இந்தப் பிஞ்சு உள்ளத்தில்
விஷக் கறையான்கள்
வந்து விழுந்திடா வண்ணம்
காத்து உன்னை

எப்படி வளர்ப்பது
என்பதே கேள்வியாயிருக்கிறது.
ஆதிக்க உணர்வுகள்
வல்லுறவு செலுத்தும் பூமியில்
நேர்மையின் ஒளிகொண்டு
நீ நடக்கும் பாதை
எவ்வளவு கரடுமுரடானது என்பதை
நான் குறித்து வைத்திருக்கிறேன்
உனது ஞாபகங்களுக்காக மகளே.


கரப்பான் பூச்சியைப்போல
ஊரும் நிகழ்காலத்தில்
உனது எதிர்காலம் பற்றிய பயம்
பல்லியாகக் கௌவிக்கொள்ள
இறந்தகாலங்களின்
இனிய நினைவுகளை மட்டுமே
சுமந்த நான்...!

கவியில் உறவாடி - தீவநதி கவிதைத்தொகுப்பு - ஒக்டோபர் 2011

# எனது பிரதி

தவறுதலாகக் கோர்க்கப்பட்டாலும்
சிறந்த அச்சுப்பதிப்பாய்
கண்முன்னே மலர்ந்து கிடக்கும்
வெள்ளைப் பிரதி.

அழிப்பதற்காய் குடித்த டிஸ்பிரின்களும்,
கடித்த பப்பாசிக்காய்களும்,
சுவைத்த அன்னாசிப் பழங்களும்
பழைய ஞாபகங்களில்
தீக்கோடுகள் இழுக்க,
அதை மறக்க முயன்று
வழக்கம் போல எனது ஆசைகளும்
கனவுகளும் வரிகளாய் விரித்த
பஞ்சுக் கன்னத்தில்
பலநூறு முத்தம் நான் தந்து கொஞ்ச,
அங்கும் இங்கும் மருளும் கருநாவல் விழிகளில்
ஆயிரம் மர்ம வினாக்கள் தேக்கிய,
இப்பொழுது இரவிரவாய்
நான் கண்விழித்துக் காக்கும்
எனது பிரதி.



மல்லிகை ஜூன் 2005

# முன்பக்க ஞாபகங்கள்

நுளம்புவலை மூடிய படுக்கைமீது
மல்லாந்து படுத்திருக்கும்
என் பழைய ஞாபகங்களைக்
கோர்த்தெடுக்கிறாள்,
பக்கத்தே படுத்திருக்கும்
சின்ன மகள்.

அறியாமையா,
துரோகமா,
மனப்பிறழ்வா...?
ஏதோவொன்று சிக்கிய ஞாபகத் தூண்டிலை
என் பக்கம் நீட்டுகிறாள்.
நீண்டு கிடக்கும்
ரயில் பாதையைப்போல
முடிவற்ற காலத்தடங்களையெண்ணி
பயத்துடன் பெருமூச்செறியும் நான்
திரும்பிப் பார்க்கிறேன்.

அவள்மீது
என்னுடையதைவிட
ஊத்தைக் கறை படிந்த
நுளம்பு வலை!

*ஜீவநதி மூன்றாவது ஆண்டு மலர் - ஐப்பசி 2010*

# மதில்கள்

மதில்கள் கட்டப்படுகின்றன
மனிதர்களை ஊடறுத்து;
மதில்கள் கட்டப்படுகின்றன
மனிதர்களைத் தனிமைப்படுத்தி;
மதில்கள் கட்டப்படுகின்றன
பயங்கள் எழுந்தோறும்;
மதில்கள் கட்டப்படுகின்றன
மனங்கள் குறுகும்போதும்.

# இருட்தேர்

தள்ளாடி நின்ற
மாலையை விரட்டி
துள்ளிக் குதித்து
என் திண்ணையில் வீழும் முன்னிரவு.

என் தொட்டிப் பூச்செடிகள்
நீரில் அலம்பி
புதுச் சிரிப்புக் காட்ட
ஒவ்வொரு வீட்டின்
கூரையின் கீழும்
ஒளிரும் மின்பூக்கள்.

நாளைய பொழுதின்
அம்சங்களை மனதுள் நிறைத்தபடி
இன்றைய நிமிஷங்களை
பிதுக்கித் தள்ளும் வேலைச் சுமைகள்.

நட்சத்திரங்கள் மின்னும் வான்,
அருகிலிருக்கும் நிலவு காட்டி
சிரித்துக் குதிக்கும்
குழந்தைகளை விலக்கி
இரவுச் சமையலின் புகைக்குள்ளே
நுழைவேன் நான்.

அநுராதபுர மாவட்ட தமிழ்க் கவிதைகள் தொகுதி ஒன்று - ஜனவரி 2010

# எதிர்காலம்

இந்தக் கூட்டிலிருந்து
கசியும் ஒலிகள்
பிறருக்குச் சொல்கின்றன
குடித்தனத்தின் ஆரவாரத்தை.

ஒன்று சேர்ந்து
கோலம் காட்டும் குழந்தைகள்
நாளைய நாளை
கேள்விக்குறியாக்குகின்றன.

நாளைய பொழுதை
இறைவனிடம் ஒப்படைத்து
இன்றைய பொழுதின்
கடமைகளைச் சுமந்த
என்னிடம் இல்லை,
எனது மனச் சித்திரத்தை
இந்தக் குழந்தைகள்
என்றாவது
மாற்றியமைக்கலாம் என்ற எண்ணத்தின்
பலஹீனமான
ஒரு கீற்றாவது.

படிகள் ஆகஸ்ட் 2009

*********

நான் தொழும்
முசல்லாவின் ஓரத்தில்
கள்ளத்தனமாய் வந்து நின்று
சிறுநீர் கழிக்கும் குழந்தை;
என் சட்டைப் பின்களுக்காகக் கூட
போட்டி போடும் மூத்தவள்;
என் ஓங்கிய குரலின் சிறைக்குள்ளே
எப்பவும் அடங்கியொடுங்கும் பெரியவன்,
யாவர் உண்ணவும்
பரத்தி வைப்பேன்
என் தாய்மையின் ஸஹனை...

ஒரு புத்தகத்தைக் கையிலெடுத்து
உட்காரும்போது
அருகே வந்து நாற்றமடிக்கும்
குழந்தையைத் தூக்கிக் கொஞ்சி,
இந்தக் கணத்தை ருசித்து
நஜீஸை சுத்தம் பண்ணும்
எனக்கில்லை,
எனது தாய்மையின் குவளையை
கவனமாகக் காத்து
இவர்கள் குடித்து முடிப்பார்களா
என்ற ஒரு கேள்வி கூட.

அடிக்குறிப்பு:
முசல்லா - தொழுகை விரிப்பு
ஸஹன் - முஸ்லிம்கள் சேர்ந்து உணவுண்ணும் பாத்திரம்
நஜீஸ் - அசுத்தம்

# முகங்கள்

மனிதர்கள் வீசிய
குப்பைகள் நாறி
நாற்றமெடுக்கின்ற
இந்த சரளைக்கல் வீதியில்
எனது குழந்தைகள் விளையாடுகிறார்கள்.

முன்னம் கலகலத்து ஒதுங்கிய
தென்னங்கிளிகளின் அரவமற்று
அமைதியாய் ஒதுங்கி
தோட்டங்களின் உள்ளிருந்து
எட்டிப் பார்க்கின்றன
தென்னை மரங்கள்.

புழுதி கிளப்பும் வாகனங்கள்
இடையிடையே கடக்கின்றன,
குழந்தைகளின் விளையாட்டுக்கு
சிறிது ஓய்வு கொடுத்து.

அந்த ஓய்வின் இடைவெளியில்
மெல்லச் சுழன்றெழும்
புகைமூட்டமாய் காலம்.

அந்தக்காலத்தின் தூசி துடைத்து,
மீண்டும்
என் குழவிகளின் முகம்காண நாடுகிறேன்.
அங்கே அவை இல்லை;
வேறு சில தெரிகின்றன.

ஒன்று:
தகப்பன் வீட்டாருக்கும்,
இறந்துபோன தாய் வீட்டாருக்கும்
நடுவே நடந்த
கத்திக் குத்துப் போட்டியில்
காயம் பட்டு இரத்தம் பெருகி
இறந்துபோன
பச்சை மதலையின் முகம்.

இரண்டு:
தன் பச்சை மண்ணுக்கு
காசு சேர்ப்பதற்காக
வெளிநாடு பறந்த அம்மா
கையிரண்டும் இழந்து
மீண்டு வந்த அனாதரவு முகம்.

மூன்று:
உள்ளூர் யுத்தம் குடித்தது போக,
லெபனான் யுத்தம்,
பலஸ்தீன் யுத்தம்,
ஈராக் குண்டுகள்,
ஆப்கன் குண்டுகள்
ரத்தக் குதங்களைப் பிளக்க,
கருகியழிந்து போனாலும்,
நெஞ்சக் கிணற்றுக்குள்
வாடாத ரோஜா மலர்களின்
கண்ணீர் முகம்.

தீவகம் - கார்த்திகை-மார்கழி - 2009

# தனிவழி

எங்கேயுமில்லை,
இதயத்தை மட்டுமே எண்ணி
இதயத்தால் நெருங்கும்
எளிய மனிதர்கள்.

அவர்கள் வரைந்து வைத்த
பிரமாண்டமான வரைகோடுகளில்
ஒருபோதும் அடங்குவதில்லை
எனது சித்திரம்.

எனது விழிகளில் தெரியும்
வெண்பூக்கள்
அவர்களது விழிகளுக்குக்
கருமையாகவே தெரிகின்றன.

எந்த வீட்டின் முன்பும்
வீற்றிருக்கின்ற பூஞ்செடிகள்
என்னைக் கவர,
அவர்களது விழிகளில் விழுவதென்னவோ
வீட்டினுள்ளே இருக்கும்
ஒட்டறையும், தூசியும்.

எனது பார்வையில் கோளாறென
அவர்களும்,
அவர்களது பார்வையில் கோளாறென
நானும்
நிச்சயித்துக்கொள்ள,
என்வழி நடக்கிறேன்,

உடைந்த மண் பாத்திரத்தின்
ஓடுகளைப் பொறுக்கி வீசும் ஓநாய்
என் குழந்தைகளை
இழுத்துச் சென்றிடுமோ
என்ற கவலையோடு.

# பிள்ளை விளையாட்டு

என்னவென்றே தெரியாத எதையோ
சேர்த்து வைக்கிறாய் நீ;
நீ சேர்த்து வைத்தவற்றுள்
தனக்குத் தேவையானதை
பிரித்தெடுக்கிறாள் அவள்.
அவள் களவெடுப்பதை
நீ கண்டபோதும்
கண்டிக்க முடிவதில்லை உன்னால்.
நீங்கள் முழு மனிதர்களாக மாறி
காலத்தின் மடியில்
பூச்சூடிக் கொள்ளும்
அந்தக் காலம்...?

# எம் பெண்டிர் நிலை

விடிகிறது.
நான் ஜன்னலருகே உட்கார்ந்திருக்கிறேன்.
கையில் குழந்தை;
அடுப்பில் குழம்பு;
எதிரே பிளாஸ்டிக் பூக்கள்.
மீண்டும் மூடிய ஜன்னல்;
மூடிய கதவு.
வெளியே பேச்சுக்குரல்கள்.
வெளியே
மனிதர்கள் வாழ்கிறார்களா என்ன?
இந்த நாலு சுவர்களுக்கப்பால்
மனுஷவாழ்க்கை இருக்கிறதா என்ன?
இருக்கட்டுமே.
அவர்கள் வாழ்ந்தால் என்ன?
வீழ்ந்தால் என்ன?
எனக்கு
கையில் உள்ள
குழந்தை பெரிது;
அடுப்பில் கொதிக்கும்
குழம்பு பெரிது;
அதைவிடப் பெரிது
நான் தினமும் பார்க்கும்
டீவி மெகா தொடர்.

# சகோதர பாசம்

தானைக் காற்று சுழன்றடிக்க,
அலையும் ஆற்று நீருக்கு மேலே
அபயம் வேண்டி
உயர்ந்து தாழ்ந்து மறையும்
கரம் எனதே.
ஆற்றங்கரையருகே
நெஞ்சு நிமிர்த்தி
கிளைபரப்பி நிற்கும்
ஆலமரத்தின் சிறுவிழுது விட்டு
என்னைக் கரைசேர்க்கிறீர்கள்.
எத்தனைமுறை விரட்டியடித்தாலும்
உங்கள் வீட்டு வாசல்
வரக்கூடாதென எச்சரிக்கப்பட்ட
எனது நாய்
மீண்டும் வரும்
உங்கள் தீராத இதய தாகங்களில்
தனது உமிழ்நீர்
சிறிது தெளிக்க.

# பழைய நினைவு

சிற்றோடை பாயும்
குளிர்ந்த மாலை வேளைகளில்
உனை நாடி வந்து
நீருண்ட குருவி நான்.
சிட்டுக்குருவியாய்
சின்ன வாய்க்குள்
நான் கொண்டவை
கொஞ்சம்தான் எனினும்,
கொளக்கொளக் குறையா
நீர்ச்சுனை தந்தாய்;
எனக்குள் நீரூற்றாய் சுரந்தாய்;
பெருந்தாகம் தீர்க்க வழியில்லா
கானலே நீயாயினும்
உன்னிடம் பருகிய ஓர்துளி
காலமெல்லாம்
ஜீவன் நிறைக்கும்;
என் விழியை
நீரால் நனைக்கும்.



# நான் வளர்த்த ஒரே கோழிக்குஞ்சு

செல்லப் பிராணிகளுக்கும், எனக்கும்
எந்த நேச பந்தமும் இருந்ததில்லை,
உன்னை என் கையில்
பலவந்தமாயக் கொடுத்து,
கோழிக்குஞ்சு கேட்டு
அடம்பிடித்த மகளின்
அழுகையை ஆயுதமாக்கி
இருபது ரூபாயைப் பறித்து
அந்த வியாபாரி செல்லும்வரை.

கையில் தூக்கிக் கொஞ்சியதும்,
தோளில் சாய்த்து முத்தமிட்டதும்,
கீச்செனு ஒலித்து
என் மடியில் ஏறி
உடம்பு ஒடுங்கி
நீ தூங்கிப்போனதும்
நினைக்கவே ஆனந்தம்.

நீ எச்சமிட்ட கூடு
அனாதரவாய் கிடக்க,
அதிகாலை
உன் ஞாபகத்துடனேயே விடியும்.
உன் நினைவுகள்
கண்ணீராகச்
சிதறும் இல்லத்தில்
உன் கீச்சுக்குரல்
இன்னும் கேட்கிறது.

உனக்கு என்ன ஆகியிருக்கும்
என்ற கற்பனையே
என்னைக் கொதிக்க வைக்கிறது;
பஞ்சைப்போல மென்மையான உன்னைப்
பாதுகாக்கத் தவறினோம்
என்ற உண்மை
தீயாய்ச் சுடுகிறது.

பல கனாக்களில் உன்னைக் கண்டும்
நீவரவில்லை குஞ்சே...!
மறுமையிலாவது சந்திப்பேனா?
அதுவரை... அதுவரை...
எங்கே நீ?



# கேள்விகள்-அறிவுரைகள்-ஆலோசனைகள்

ஏன் உங்கள் குழந்தை
இப்படி இருக்கிறாள்?
செம்பட்டை முடி போக
ஏதும் செய்வதில்லையா நீங்கள்?
கேள்விகள்...!

இப்படி இருந்தால் அசிங்கமாச்சே – பொம்பளப் புள்ள
அழகா இருக்க வேணாமா?
நாளைக்கி ஒருத்தன் விரும்பணுமே...
அறிவுரைகள்...!

அருதை இலை காய்ச்சி
பொன்னாங்கண்ணி சாறு இட்டு
பூசிப்பாருங்க...சரியாகிடும்...
ஆலோசனைகள்...!

இந்தப் பூமியில் எந்தக் கவலையுமின்றி
நான் வளர்க்கும் என் செல்ல மகள் பற்றி
ஆயிரம் கேள்விகள்..
அறிவுரைகள்...
ஆலோசனைகள்...!

எது எப்படி இருந்தால் என்ன?
அவள் என் மகள்.
ஆனாலும், மூட்டைப் பூச்சிகள் பெரிதாகி
பெரு மூட்டைகளானதுபோன்று எப்போதும்
என் கண்ணெதிரே
கேள்விகள்... அறிவுரைகள்...ஆலோசனைகள்...!

# விஷ்வாசனீய வெனசக்
# (நம்பிக்கைக்குரிய மாற்றம்)

உங்கள் கம்பீர நடை,
நட்சத்திர சின்னங்கள்,
விழுப்புண் தாங்கிய மார்பு
யாவும் கண்டு
நம்பிக்கைக்குரிய மாற்றம் வருமென்று
காத்திருந்தோம்.
வந்தது;
ஆனாலும்
சிறையில் வாடும்
பட்சியானீர்கள்.
தாயின் மரண வீட்டுக்கும்
வரமுடியாதவரானீர்கள்.
ஆயிரம் camera கள் மின்ன,
உங்கள் தோளில்
சாய்ந்து அழுவதுகூட
சிரமமாகிப் போனது.

யாரோவாக வாழ்ந்தோம்;
இன்று
யாவரும் அவதானிக்கும் நிலைக்கு
ஆளானோம்.
ஆகையினால்,
அன்பைப் பகிர்ந்து கொள்ளவும்,
அழுகைளைச்
சுமந்து கொள்ளவும்
தயங்கினோம் இன்று.

அவர்கள் உங்களை அச்சுறுத்தியபோது
பயந்து அழுத நான்
நீங்கள் உள்ளே இருக்கிறபோது
தைரியசாலியானேன்.
நீங்கள் ஏறாத மேடைகள் ஏறியும்,
நீங்கள் சொல்லாமல்
அவர்கள் தடுத்த
வார்த்தைகள் பேசியும்,
மக்களோடு கலந்து
காத்திருக்கிறேன்.

என்று வரும்
அந்த
நம்பிக்கைக்குரிய மாற்றம்?

## கடன்

கடன் வழங்கிவிட்டு
கிடைக்காமல் போனால்
வரும் தவிப்பு போலவே
கடன் கொடுக்க மறுத்துவிட்டுத்
தவிப்பதும்
துன்பமானது.

# செருப்பு தைப்பவள்

என் செருப்பு பிய்ந்தது.
தைக்கப்போனேன்
தைத்தாள்.
மறுமுறை போனேன்;
மீண்டும் போனேன்.
முறைத்தாள்.
“இது என்ன ரோதனை?
புதுசு வாங்கறதுதானே..”
என்றாள்.
காந்தியும்,
ஆபிரகாம் லிங்கனும்
போயிருந்தாலும்
இப்படித்தான் சொல்லியிருப்பாளோ?

# சைக்கிள் ஓட்டுதல்

வீதியில் செல்லும்போதும்,
பண்டம் வாங்கும்போதும்,
பல்லிளித்துக் கதைபேசும்
இந்த வீணர் கூட்டத்தை விட்டும்,
ஊரும் பேருந்துகளில்
உரசும் சேட்டைகளில் தப்பியும்,
அங்கம் துளைக்கும்
அற்ப பார்வைகளை மீண்டும்
பெண்கள் சைக்கிள் ஓட்டுதல்
எத்தனை அழகு..!

சந்திர மண்டலத்திலும்
இச்சங்கதிகள் தொடரும் என்பதால்,
மகளிர் ஆட்சி வந்தாலும்
இது மாறாது என்பதால்,
ஆண்களைத் தாண்டி
பெண்கள் சைக்கிள் ஓட்டுதல்
எத்தனை அழகு..!



# பாதை தெரியுது பார்

வெள்ளிச் சுடரொளி கீழைத் திசைவர
பாதை தெரியுது பார்
வெற்றிக் கொடியின் வீர அசைவினில்
பாதை தெரியுது பார்

சூழும் இருட்கடல் தூர ஒழிந்திட
பாதை தெரியுது பார்
சுட்டும் விழிச்சுடர் வைய மளந்திட
பாதை தெரியுது பார்

துயர ஓடங்கள் கரையைச் சேர்ந்திட
பாதை தெரியுது பார்
துன்ப கீதங்கள் காற்றி லோடிட
பாதை தெரியுது பார்

பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேர்ந்திட
பாதை தெரியுது பார்
பூட்டிய கதவுகள் பூட்டு திறந்திட
பாதை தெரியுது பார்

சாந்தி சாந்தியென நாத மிழைந்திட
பாதை தெரியுது பார்
சமா தானமெனும் தாகம் தீர்ந்திட
பாதை தெரியுது பார்

அகதி எனும்பேர் அறவே அழிந்திட
பாதை தெரியுது பார்
அன்னைத் தீவினில் மூவரும் கூடிட
பாதை தெரியுது பார்

அச்ச மில்லையென ஆடி மகிழ்ந்திட
பாதை தெரியுது பார்
உச்சி குளிர்ந்து வான முயர்ந்திட
பாதை தெரியுது பார்

குருதிப் புனலின் கோர மொழிந்திட
பாதை தெரியுது பார்
குற்ற மறந்து நாங்க ளிணைந்திட
பாதை தெரியுது பார்

ஷெல்லின் அடிகள் தேய்ந்து போயிட
பாதை தெரியுது பார்
சித்திரை வெடியில் சித்தம் நிறைந்திட
பாதை தெரியுது பார்

சின்னஞ் சிறுசுகள் பள்ளி சென்றிட
பாதை தெரியுது பார்
சிதைந்த கனவுகள் ஒன்று சேர்ந்திட
பாதை தெரியுது பார்

தை பிறந்திட வழி பிறந்தது
பாதை தெரியுது பார்
தீப ஜோதியில் திருநாள் மலர்ந்திட
பாதை தெரியுது பார்

பூவும் பொட்டும் எம்மவர் சூடிட
பாதை தெரியுது பார்
பூத்த மலர்க்கொடி வாழ்வு கண்டிட
பாதை தெரியுது பார்

இல்லங்கள் தோறும் இனிமை விளைந்திட
பாதை தெரியுது பார்
இல்லாள் கொண்ட தாலி நிலைத்திட
பாதை தெரியுது பார்

மேகம்தொடும் பொருள் விலைகள் குறைந்திட
பாதை தெரியுது பார்
மேற்கே போனவர் மீண்டு ஊர்வர
பாதை தெரியுது பார்

மரண வாடை வீசிய தேசத்தில்
பாதை தெரியுது பார்
மலர்ந்து குலுங்கிடும் பூக்கள் நிறைந்திட
பாதை தெரியுது பார்


ஆடும் தமிழ்க்கொடி நாடு போற்றிட
பாதை தெரியுது பார்
அன்றவர் கொண்ட சண்டைகள் ஓய
பாதை தெரியுது பார்

எங்கள் தமிழ்மொழி எங்கணும் முழங்கிட
பாதை தெரியுது பார்
எம்மவர் சுமந்த ஏக்க மழிந்திட
பாதை தெரியுது பார்

மெல்லத் தமிழினி சாகா வரம்பெற
பாதை தெரியுது பார்
மெலியார் கண்டு வலியார் இரங்கிட
பாதை தெரியுது பார்


நேற்று கனிந்தது சமத்துவ வாழ்வு
பாதை தெரியுது பார்
நாளை மலர்ந்திடும் நம்மவர் உறவு
பாதை தெரியுது பார்

நீயும் நானும் இயல்பாய் வாழ்ந்திட
பாதை தெரியுது பார்
நீங்கிப் போனவர் தியாக ஒளியினில்
பாதை தெரியுது பார்.



# பெண்

எழுதிக்கொண்டிருந்த கவிதை
தொடர மறுத்தது;
குழந்தையின் அழுகையே
முதலாம் பட்சம்.



# அனுமானம்

குடித்துவிட்டு வீதியில் தள்ளாடும்
முகம் கறுத்த
குடுமிக்காரன் என்றே
உன்னை நானறிவேன்
அன்றொருநாள்
காணாமல்போன என் மகனைக்
கண்டுபிடித்து,
கைபிடித்து அழைத்து வந்து,
“அக்கா” என்றழைத்து
ஒப்படைத்துச் சென்றாயே
அப்பொழுது
என் அனுமானங்கள் எல்லாம்
உன் காலடியில் விழுந்து நொறுங்க,
பேச்சிழந்து நின்றேன் நான்.

# வேண்டாத கர்ப்பம்

ஒரு கணம், ஒரே கணம்
பன்னீர்க் குளத்தில் உடல் நழுவ
மறுகணம்,
தூண்டிலில் சிக்கிய
புழுவே மனம்!

***

முடியாத நீண்ட சர்ப்பமென
நெஞ்சைக் கொத்தும்
ஒரு கணம் தவறிய
இரவின் நினைவு

வளரும் பிறையாய்
வயிறு துருத்த
ஏளனமும், இகழ்ச்சியும்
முன்னே விரியும் கம்பளங்களாய்...
“இன்னொன்டா?”

விஷப்பல் நீள நீள
பேதை நெஞ்சில்
கசக்கும் வினாக்கள்.
“இந்த லோகத்தில்
அரைவாசி உயிர்கள்
இப்படித்தான் ஜனித்திருக்குமோ?“

கால்கள் உதறிக் கதறி அழும்
பத்தாம் மாதம்,
கால்களுக்கிடையில்
வந்து விழுந்து கதறும்

பச்சை மண்ணின்
மின்மினி விழிகளின் படபடப்பில்
மெல்ல மெல்ல
மறைந்து போகும்
அந்த நினைவு...
நினைத்த நெஞ்சைக்
குற்றவாளியாக்கிக்
கரைந்து செல்லும்
அந்த நினைவு!

# சின்ன மகளின் சின்ன ஆசை



தனக்கொரு தம்பிப் பாப்பா
அல்லது
தங்கச்சிப் பாப்பா வேண்டுமென்று
அடம்பிடிக்கும் மகளுக்கு
மனதுக்குள் சொல்கிறேன்:

அம்மா,
நீ இந்த உலகில்
வந்ததுகூட தற்செயலாகத்தான்.
ஏலவே நாலு கர்ப்பம் தாங்கி
நலிந்துபோன பை
இன்னொன்று தாங்காது.
உன்னைப்போலவே எனக்கும்
குழந்தை என்றால் ஆசைதானம்மா.
ஆனாலும் இனி அடுத்த வீட்டுக்
குழந்தையை மட்டுமே கொஞ்சலாம் என்று நான்
வரையறை செய்ததுபோல
அதோ கிடக்கிறதே உன் ஆசை பொம்மை,
அதைக் கொஞ்சி நீ விளையாடு அம்மா.
உன் இந்த ஆசையை
நிறைவேற்ற லாயக்கற்றேன் நான்.
வீடு நிறைய செல்வமிருந்தும்,
மழலைச் செல்வம் போதும் போதுமென நினைக்கும்
பிறத்தியார் முன்னே
நான் முகச்சுளிப்புக்கு ஆளாகும் காலமிது.
எல்லா வசதிகளோடும் தாத்தா பாட்டி வசதிகளும்,
ஆயா, சேவா வசதிகளும்
அற்றேன் யான்.

# ஓ அட்மிரா... ஓ பொஸ்கோ...!

காதலின் எல்லையைத் தேடி
கடைசிவரை ஓடிய ஜோடியே,
இருபது வருடங்களாகியும்
உங்களை மறக்க முடியவில்லை.
வாழ்வைத் தேடி ஓடிய நீங்கள்
சாவின் அரவணைப்பில்
உறைந்து கிடந்தீர்கள்.
மனித இதயத்தின் நல்லியல்புகளை மூடிய
கொடிய யுத்தத்தைப் போலவே
அந்த யுத்த பூமியில் நீங்கள்
பனியால் மூடுண்டீர்கள்.
இத்தனைக் காலமாகியும்
உங்கள் நினைப்பு
வதைக்கிறதே என்னை...



பி.கு:
*1993*இல் உலகை உலுக்கிய பொஸ்னியசேர்பிய யுத்தத்தில் அநியாயமாகக் கொல்லப்பட்ட முஸ்லிம்-கிறிஸ்தவ காதல் ஜோடி இது. யுத்த பூமியின் எல்லையைத் தாண்டி அப்பால் சென்று வாழ்வைத் துவங்கலாம் என்று எண்ணி ஓடிய இந்த ஜோடி இராணுவத்தினரின் குண்டுமழையில் அகப்பட்டு உயிரிழந்து, ஐந்து நாட்களாக இரவும், பகலும் பனியிலும், வெயிலிலும் காய்ந்தபடி இப்படியே கிடந்தது. இறுதியாக சேர்பியர் பொறுப்பேற்று உடல்களை அடக்கம் செய்தனர்.



....கெக்கிறாவ ஸஹானாவின் கவிதைகள்
எண்பதுகள் தொடக்கம் ஈழத்தில்
முனைப்புப்பெற்ற பெண்ணிலைவாத
நோக்குடைய கவிதைப் போக்கின்
வெளிப்பாடுகளாகின்றன.
இவற்றில் சில கவனத்திற்குரிய படைப்புகளாகும்.

இவரது கவிதைகளில் நெருங்கி நின்று
உறவாடுகின்ற நுண்மன உணர்வுகள்
எளிமையாகவும், ஆழமாகவும்,
அதேவேளையில் வெகு இயல்பான
முறையிலும் வெளிப்படுத்தும் ஆற்றல் என்பன
இடம்பெற்றுள்ளன. அவ்வப்போது வித்தியாசமான
புதிய மொழிப் பிரயோகங்களைப் பயன்படுத்தும்
ஆற்றலும் அவருக்குள்ளது.

கலாநிதி செ.யோகராசா,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

Printed by: Mathi Colours, Nallur. 021 222 9285